திராவிடநாடு

29—5—60 | வார வெளியீடு | விலை 16 காசு

வாராய்!

—[ச. இராமையன்]—

சங்கத் தமிழ்மொழிக்கு
பங்கம் வந்ததெனில்
பொங்கி எழுந்திடல் வேண்டும்—நம்
அங்கம் துடித்திடல் வேண்டும்!
சிங்கத் தமிழ்க்குலமே
எங்கும் படைதிரள
பங்கைக் கொடுத்திட வாராய்—போர்ச்
சங்கை முழக்கிட வாராய்!

நாட்டை பிடித்துவிட்ட
கேட்டைக் களைந்திடாத
மாட்டைத் துரத்திடல் வேண்டும்—அதன்
சேட்டை ஒழிந்திடல் வேண்டும்!
நாட்டைப் பிரிப்பதற்கு
வீட்டை மறந்து பகைவன்
பூட்டை உடைத்திட வாராய்—நம்
கோட்டை நமதாக்க வாராய்!

“ஐயோ, பாவம்!”

—பழநி—

"மாணிக்கம்! எத்தனை நாள்தான் இப்படியே இருக்கப்போகிறாய்? ஒரு வருடமாக வேலை வருகிறது வருகிறது என்று சொல்கிறாய்! எப்பொழுதடா உனக்கு வேலை கிடைக்கப்போகிறது! உன்னோடு படித்துப் பட்டம் பெற்றவர்களெல்லாம் வேலைக்குப் போய் விட்டார்கள்!

பக்கத்து வீட்டுப் பூஞ்சோலை அம்மாளின் பிள்ளை வேலையில் இருந்துகொண்டு மாதம் தவறாமல் பூஞ்சோலைக்குப் பணம் அனுப்பிக்கொண்டு இருக்கிறான். எதிர் வீட்டுப் பொன்னம்மாளின் மகனுக்கு டில்லியில் வேலையாம்! பொன்னம்மாளையும் டில்லிக்குக் கூட்டிப்போகிறான் மகன்! கடைசி வீட்டு கலாவல்லி அம்மாளின் பிள்ளை மாதச் சம்பளத்தில் மீதம் கட்டிப். பத்துச் சவரனில் சங்கிலி செய்து போட்டிருக்கிறான் பெற்றவளுக்கு!

அவர்களெல்லாம் உன்னோடு படித்தவர்கள்; பட்டம் பெற்றவர்கள். அவர்கள் வேலை கிடைத்து நல்லபடியாக இருக்கிறார்கள். உனக்கு இன்னும் வேலையே கிடைத்தபாடில்லை—மலர்விழி அம்மாள் தன் மகன் மாணிக்கத்திடம் வெறுப்புடன் எழுப்பிய கேள்விகள் இவை!

"அம்மா! வேலை செய்யாமல் ஊர் சுற்றவா நான் ஆசைப்படுகிறேன்? இல்லை அம்மா! ஒரு நாளும் இல்லை!! வேலைக்காக நான் தேடாத இடம் இல்லை! பார்க்காத பெரிய மனிதர்கள் கிடையாது; வேலைக்காகச் சுற்றிச் சுற்றி அலைகிறேன் அம்மா! பத்திரிகைகளைத் தினந்தோறும் பார்க்கிறேன்; அதில் காணும் விளம்பரங்களுக்கெல்லாம் மனு எழுதிப் போடுகிறேன்; வேலைதான் கிடைத்தபாடில்லை! நான் என்னம்மா செய்வேன்!

பொன்னம்மாள் வீட்டுக்குப் பெரிய அதிகாரி ஒருவர் உறவாம்! அவர் தயவால் பொன்னம்மாள் மகனுக்கு வேலை கிடைத்தது டில்லியில்! பூஞ்சோலையின் பிள்ளை படிப்பிலே கோட்டைவிட்டவன்; கிடைக்கக்கூடாத வேலை அவனுக்கு கிடைத்தது! எப்படியம்மா கிடைத்தது? மந்திரிக்கு வேண்டியவராம் அவன் அப்பா! தேர்தல்

ஆர். வி.

நேரத்தில் வேலை செய்தவராம் மந்திரிக்கு! அதனால் பூஞ்சோலையின் பிள்ளைக்குக் கிடைத்தது உத்தியோகம்! கலாவல்லியம்மாள் மகன் இலஞ்சம் கொடுத்து வேலையில் சேர்ந்ததாகச் சொல்கிறார்கள்!

நம்மால் அதுபோல் முடியுமாம்மா? மந்திரிகளும் பெரிய அதிகாரிகளுமா உறவு? அல்லது இலஞ்சம் கொடுத்துச் சோத்தான நமக்கு வசதி இருக்கிறதா? தகுதி இருக்கிறதோ இல்லையோ பெரிய இடத்துச் சிபார்சு இருந்தால்தான் அம்மா இந்தக் காலத்தில் உத்தியோகம்! சாதாரண குமாஸ்தா உத்தியோகத்திற்குகூடச் சிபார்சு வேண்டியிருக்கிறது இப்பொழுது! பி. ஏ. வில் முதலாவதாகத் தேறிய எனக்கு வேலை கிடைக்கவில்லை! 'தோட்' அடித்தவர்களுக்கும், மூன்றாம் தரத்தில் தேறியவர்களுக்கும் வேலை கிடைக்கிறதென்றால், இதுதானம்மா இரகசியம்!—பெற்றெடுத்த அன்னைக்கு, பி. ஏ. பட்டம் பெற்ற பிள்ளையாண்டான் கொடுத்த பதில் இது!

"மகனே! எப்பொழுதும் இது போல் ஏதாவது சொல்லிவிடுகிறாய்! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. பத்துமாதம் உன்னைச் சுமந்து பெற்று, ஆளாக்கிப், படிக்க வைத்துப், பட்டதாரியாக்கினேன்! நீ படித்துப் பட்டம் பெற்று வேலைக்குச் சென்றால் நமக்கு பெருமை வரும்; நம் வறுமை நீங்கும்; வாழ்வு மலரும் என்று கனவு கண்டேன்! நீயோ வேலை கிடைக்கவில்லை என்று ஒரு வருடமாகக் குந்தி இருக்கிறாயே, மகனே! இது உனக்கே நன்றாக இருக்கிறதா? மற்றப் பிள்ளைகளைப்போல் நீயும் வேலையில் சேர்ந்து, குடியும் குடித்தனமுமாய் இருந்தால்தானே பெற்ற வயிறு குளிரும்! இப்படி வேலை கிடைக்கவில்லை என்று நிற்பதைப் பார்த்தால் பெற்ற வயிறு பற்றி எரிகிறதடா மகனே! பற்றி எரிகிறது!!"—மலர்விழி அம்மாள் இதுபோல் என்றும் பேசியதில்லை தன் மகன் மாணிக்கத்திடம்! இன்று கண்ணீருடன் சற்றுக் கடுமையாகவே பேசிவிட்டாள்!

காரணம்—

பொன்னம்மாள் பிள்ளையும், பூஞ்சோலை பிள்ளையும் கோடை விடுமுறைக்கு ஊருக்கு வந்திருந்தார்கள். அந்தப் பிள்ளைகளின் பளபளப்பையும், தெம்பையும் கண்ட கோளாறுதான் மலர்விழி அம்மாள் தன் மகன் மாணிக்கத்திடம் இவ்வாறு பேசநேர்ந்தது! பொன்னம்மாள் பிள்ளைபோல், பூஞ்

(13-ம் பக்கம் பார்க்க)

தமிழகத்தில்—
அணைக்கட்டுத் திட்டங்கள்!

ர் 18] ஆங்கீரச வைகாசி 8. (29–5–60) தனிப்பிரதி 16-காசு [இதழ் 46

"வடக்கே கோடி, கோடியாகக் கொட்டி அணை கட்டுகிருர்கள் என்று மேடையதிரப் பேசுகிருர்கள் தி. மு. க. வினர். இவர்களுக்கு உண்மையெங்கே தெரிகிறது! தெரியத்தான் போகிறது. வடக்கே அள்ளிச் செலவழிக்கிருர்கள் என்ருல் அங்கே பெரிய பெரிய நதிகள் இருக்கின்றன. ஆனுல் தமிழகத்தில் அப்படிப்பட்ட ஆறுகள் எங்கே இருக்கின்றன! இச்சாதாரண விவரம்கூடத் தெரியவில்லையே!"

நமது "கனம்"கள் சென்றவிடமெல்லாம் இப்படிப் பேசி வருகிருர்கள். ஏதோ ஒரு பெரிய உண்மையை அவர்கள் கண்டுபிடித்துவிட்டதுபோலச் சற்று உரக்கவே பேசி வருகிருர்கள்.

"வடக்கு வஞ்சனை செய்கிறது! வடக்கே ஏராளமான பணத்தைத் திட்டங்களுக்கென்று செலவிடுகிருர்கள்" என்ற நமது குற்றச்சாட்டிற்குத் தகுந்ததோர் பதில் தேடிப் பிடித்து விட்டவர்கள்போலப் பலஇடங்கள் பறந்துசென்று கர்ச்சித்து வருகிருர்கள் நமது 'மதிமிக்க' அமைச்சர்கள்!

அவர்களின் இந்தப் பேச்சில் இரண்டுவிதக் கருத்துக்கள் தொக்கி நிற்கின்றன. ஒன்று தமிழகத்தில் பெரிய ஆறுகள் இல்லை; எனவே பெரிய அணைகட்டுத் திட்டங்கள் இல்லை என்பது. இரண்டாவது ஏளனம்—கிண்டல். இந்த இருவிதக் கருத்துத்தான் அவர்கள் குத்திக் காட்டுவதினின்றும் நாம் பெற முடிகிறது.

அவர்கள் கூற்றுப்படி பெரிய ஆறுகளே இல்லையென்றே வைத்துக்கொண்டாலும், அணைக்கட்டுத் திட்டங்கள் என்ற பெயரால் கோடிகோடியாகச் செலவழிப்பதைவிட்டு வேறு திட்டங்களுக்கு ஏராளமாகச் செலவழித்திருக்கவேண்டும். இதுதான் நல்லாட்சியின் பண்பாகும். அதைவிடுத்து "எங்கே ஆறு," என்று ஆர்ப்பதும், ஏளனம்செய்வதும் முறையுமல்ல, மகிழ்ச்சிதரக்கூடியதும் அல்ல!

"தென்னகத்தைப்" பொறுத்தமட்டில் கோதாவரி, கிருஷ்ண, காவேரி ஆகியவைகள்தான் பெரிய நதிகள் என்பதையும், ஆந்திரம் பிரிந்தவுடன் கோதாவரியும், கிருஷ்ணவும் அம்மாநிலத்தோடு சேர்ந்துவிட்டதையும், நமக்குள்ள "காவேரி" வெள்ளையர் காலத்திலிருந்தே நன்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் நாம் அறியாதவர்களல்ல! நன்ருக உணர்ந்தே இருக்கிருேம்.

ஆனல், இவைகள் தவிர வேறு ஆறுகள் இல்லை என்பதும் இல்லை. இந்த அளவு பெரிய நதிகள் அமைப்பிலும், தரத்திலும் இல்லை என்ருலும், பெரும் பயன் அளிக்கக்கூடிய நதிகள் பல இருக்கின்றன என்பதையும் யாரும் மறந்துவிடக்கூடாது. அது போலவே பல அணைக்கட்டுத் திட்டங்கள் முன்னையவைகளைப்போல் இல்லாவிட்டாலும் ஓரளவு அந்த அமைப்பில் கட்டக்கூடிய பல அணைக்கட்டுத் திட்டங்களும் இருக்கின்றன. இதையும் யாரும் புறக்கணித்துவிடக்கூடாது!

"ஆறுகள் இல்லை; எனவே அணைக்கட்டுத் திட்டமில்லை" என்று கிண்டல் செய்யும் அமைச்சர்கள், பல ஆறுகள் தமிழகத்தில் இருக்கின்றன, பல அணைக்கட்டுத் திட்டங்களையும் மேற்கொள்ளலாம் என்பதையும் உதாசினம் செய்துவிடக்கூடாது. தமிழக ஆட்சியாளர் நன்கு பரிசீலனைசெய்து மத்திய ஆட்சியாளருக்கு ஏற்றுக்கொள்ளும்படி அனுப்பிய திட்டங்கள் பல இருக்கின்றன. சட்டசபையிலும் பல உறுப்பினர்களால் கூறப்பட்ட பல அணைக்கட்டுத் திட்டங்கள் இருக்கின்றன.

இப்படிப் பல அணைக்கட்டுத் திட்டங்கள் இருந்தாலும், ஆட்சியாளருக்குப் பிடித்தமான ஒருவர் காட்டும் அணைக்கட்டுத் திட்டங்களை மாத்திரம் "ஏளனம்" செய்யும் அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவர முயல்கிருேம். காரணம் கேளாத செவிகள் கேட்காதா; கண்கள் பார்க்காதா என்னும் நப்பாசையால்தான்.

1. அலாடித் திட்டம்

"பெரியாறு" நதியின் குறுக்கே அணை ஒன்று கட்டினல் மதுரை அல்லது இராமநாதபுர மாவட்டம் நன்கு செழிப்படைய முடியும். அதன் மூலம் 200000 ஏக்கர்

களைப் பாசனத்திற்குக் கொண்டுவர முடியும். மேலும் தமிழகத்தில் இதன் மூலம் 116000 "கிலோ வாட்" மின்சாரமும் உற்பத்தி செய்ய முடியும்.

2. பம்பையாறு திட்டம்

கேரள ஆறு மேல்மலைத் தொடரின் கிழக்குப் பகுதியில் பிரிந்து ஓடும்போது "பம்பையாறு" ஆகிறது. இது பெரியாறுக்குப் பக்கத்திலிருந்து தென் பக்கமாக உருவாகிறது. இதன் நீர் வீணாக அரபியக் கடலில்போய் விழுகிறது.

உபநதிகளான காக்கியார், அத்தோடு, பம்பையாறு ஆகியவைகளின் குறுக்கே "ரிசர் வாயர்கள்" கட்டி இவைகளை இணைத்தால் பம்பையாறு திட்டம் உருவாக முடியும்.

இத்திட்டத்தின் மூலம் "வைப்பாறு" ஆற்றுக்கு எப்போதும் தண்ணீர் வரும். இரண்டு இலட்சம் ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்கு உள்ளாகலாம். திருநெல்வேலி, இராமநாதபுர மாவட்டங்கள் இதன் மூலம் நன்மை பெறமுடியும். இத்திட்டத்தின் மூலம் 177000 "கிலோ வாட்" மின்சாரமும் உற்பத்திசெய்யமுடியும்.

3. புனலூர்த் திட்டம்

செந்துறை, குளத்துப்புழா ஆகிய ஆறுகளின்மேல் அணைகட்டினால் நற்பலன் கிடைக்கும். "தாம்பிர பரணி" ஆறு இதன்மூலம் அதிக தண்ணீர் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. நெல்லை மாவட்டத்தில் மீண்டும் 16000 ஏக்கர் நிலங்களை வேளாண்மைக்குக் கொண்டுவரலாம்.

4. கோதாவரி—கிருஷ்ணா ஆற்றுநீரைப் பிரித்தல்

துங்கபத்திரா, நாகார்ச்சுனசாகர் திட்டங்கள் முடிந்த பின்னரும்கூட மேற்கூறப்பட்ட இரண்டு நதிகளின் நீர் உபரியாக இருக்கிறது. கோதாவரி ஆற்று நீர் நன்கு பயன்படுத்தப்படவில்லை. தண்ணீர் தேவைப்படும் "கிருஷ்ணா டெல்டாப்" பகுதிக்குப போக மீதித்தண்ணீரை அணைகட்டுமூலம் தமிழகத்திற்குக் கொண்டுவந்தால் சுமார் 6-இலட்சத்திலிருந்து 8-இலட்சம் வரை அதிக நிலங்களை வேளாண்மைக்குக் கொண்டுவரலாம்!

நாலே நாலு திட்டங்கள்தான்! நாலும் நல்ல பலன் தரக்கூடியனதான். செழிப்பாவதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் வழி கோலக்கூடியனதான் இத்திட்டங்கள்.

இத்திட்டங்களின் மூலம் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் புதிதாகச் சாகுபடிக்கு வருகின்றன.

இலட்சக்கணக்கான "கிலோவாட்" மின்சாரம் இத்திட்டங்களின் மூலம் உற்பத்தி செய்யவழி இருக்கிறது.

எனவே நல்லதிட்டம் என்பதற்குத் தடையேதும் இல்லை. இத்திட்டங்களின் இலாபத்தைப்பற்றி எழுத என்ன உரிமை இருக்கிறது என்று கேட்பீர்களல்லவா? இந்த "உரிமையை" வழங்கியவர் ஒரு "பெரியவர்". தமிழக ஆட்சியில் பங்குபெற்றவர். நிபுணர்! பொறியியலர்! சென்னை அரசின் தலைமை விவசாயப் பொறியியலர் [Chief Engineer for irrigation of Madras] அவர் பெயர் K. V. ஏகாம்பரம் என்பது.

அரசின் தலைமை விவசாயப் பொறியியலர் K. V. ஏகாம்பரம் அவர்கள்தான் சென்னை அரசின் மாத வெளியீடான Madras Information என்னும் பத்திரிக்கையில், 1960, ஜனவரி இதழில் "Hopes for the future" என்னும் கட்டுரையில் மேற்கண்ட விபரங்களைத் தந்துள்ளார்.

எழுதியிருப்பவர் அரசின் தலைமைப் பொறியியலர்!

எழுதி வெளியாகி இருப்பது அரசின் வெளியீட்டில்.

இதைவிடத் தகுந்த ஆதாரத்திற்கு எங்கு போவது?

அவர் தந்த இந்த உரிமையை வைத்துத்தான் இத்தலையங்கம், தீட்டப்பட்டதாகும்.

இந் நான்கு திட்டங்களின் அமைப்புமுறை, அதன் பலாபலன்கள் ஆகியனபற்றியெல்லாம் கூறிவிட்டு, கட்டுரையை முடிக்கும்போது அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:—

"இத்திட்டங்களின் மூலம் கிடைக்கும் பாசன வசதியானது முதல், இரண்டாம் திட்டங்களினால் கிடைக்கும் பாசன வசதியைவிட எவ்வளவோ அதிகமாகும். மேலும் சென்னையைப் பொறுத்தமட்டில் பல நூற்றாண்டுகளாகக் கிடைத்துவரும் பாசன வசதியில் சரிபாதி அளவு இத்திட்டங்களின் மூலம் கிடைக்கும். மின்சார உற்பத்தியும் கூடுமான அளவு குறிப்பிடத்தக்கதாகும். கனவு போலத் தோன்றும் இத்திட்டங்கள் பக்கத்து மாநிலங்களின் உதவியாலும், மத்திய ஆட்சியின் ஒத்துழைப்பாலும் நனவாகும் என்று நம்புவோமாக! இத்திட்டங்களினால் இப்பகுதி வளமும், வாழ்வும் பெறட்டும்" என்பதாகக் கூறுகிறார் தலைமைப் பொறியியலர்.

அவர் கூற்றிலிருந்து திட்டத்தின் முக்கியத்துவத்தை நாம் எளிதில் உணர்ந்துகொள்ள முடியும். நமது "கனம்"களும் இதை வெற்றுரை என வீண் மொழி பேசிவிட முடியாது! அருமையான திட்டம் இது! ஆகும் திட்டமாகும்!

(14-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

29—5—60.

தம்பி !

கடும் புயலும் கடற் கொந்தளிப்பும் ஏற்பட்டுக் கலத்தைச் சுக்கு நூறாக்கி விட்டது; இருந்தோர் இறந்துபட்டனர்; ஒருவன் மட்டும் உயிர் தப்பினான்; மக்களற்ற ஓர் தீவு சென்றான்; ஆண்டு மூன்று ஆகிவிட்டன; ஏதேனும் ஓர் கலம் வரும், தன்னைக்கண்டு அழைத்துச் செல்லும்; மீண்டும் ஊரில் உலவி உற்றாருடன் குலவி, மகிழலாம் என்று ஒவ்வொரு நாளும் எண்ணுவான்; ஏங்குவான்!

எங்கும், பச்சைப்பட்டு விரித்திருப்பதுபோலத் தீவு காட்சி தந்தது; பல வண்ணப்பூக்கள், பாடும் பறவைகள், சுவைமிகு கனிகள்; ஆலோலம் பாடும் அருவிகள், மெனகாற்றைத் தரும் பூங்காக்கள், எல்லாமதான் இருந்தன, அந்தத்தீவினில். ஆனால், இவைகளைப்பற்றிப் பேசி மகிழ, காட்டிக் களிப்பூட்ட, வேறு ஒருவரும் இல்லை! எதிரே, கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் கடல்! அதன் ஒலி, கேலி செய்கிறதோ, தன்னை!! —என்று எண்ணத்தக்க விதத்தில். மேலே மேகக் கூட்டம்! சூழ, இருந்தவை, உற்று நோக்கிட மட்டுமே இடமளித்தன, உரையாட, உறவாட அல்ல!

கானம்பாடும் வானம்பாடியிடம், அவன் என்ன பேசமுடியும்; சிறிது நேரம், 'இனிய இசை' என்று மகிழ்ந்து கேட்கலாம்!!

ஏக்கம் அவனை வாட்டியதிலே, ஆச்சரியம் என்ன இருக்கமுடியும். மூன்று ஆண்டுகள்—ஆயிரம் நாட்கள்—தன்னந்தனியனாக ஒரு தீவிலே இருக்கிறான்!!

ஒரு நாள், கலம் ஒன்று நெடுந்தொலைவில் வருவது கண்டான், களிநடமாடினான்; கர்த்தரைத் தொழுதான்; கரத்தால் குறிகாட்டினான்; களிப்புடன் கூவினான்! கலம், அவன் இருக்கும் பக்கம் நோக்கி வரலாயிற்று! வாழ்வு, மீண்டும்! மக்களுடன் உறவாடும் நாட்கள், மறுபடியும்!! என்று எண்ணி மகிழ்ந்தான.

கலத்திலிருந்து ஒருவன், படகேறித் தீவின் கரைநோக்கி வந்தான். வணங்கினான், வாழ்த்தினான், கட்டிப் பிடித்துக்கொண்டு, 'கர்த்தரே' தான் உன்னை இங்கு அனுப்பிவைத்தார். என 'ஜெபம்' பலித்தது. ஏக்கம் தீர்ந்தது. மீண்டும் மனிதனானேன்! உன்னை என்றென்றும் மறவேன்! என்னை வாழவைக்க

தீவில் தங்கியவன் கதை

"வந்துள்ள தெய்வம், நீயே!" என்றெல்லாம், கூவினான், குளறினான், குதூகலத்துடன்.

வந்தவனோ, ஒரு காகிதக் கட்டினைத் தந்து, உலகின் நிலை அறிவிக்கும் பத்திரிகைகள், இவை. படித்துப்பாரும். இதற்குள், நாங்கள், மற்றோர் பக்கம், ஒரு வேலையாகப் போய்விட்டுத் திரும்பி வருகிறோம். அதற்குள் இவைகளைப் படித்து முடித்துவிடலாம். உலகம் இன்றுள்ள நிலை தெரியும், புரியும்! புரிந்த பிறகும், உனக்கு இங்கிருந்து வந்துவிட விருப்பம் இருக்குமானால், உடன் அழைத்துச் செல்கிறோம் என்று உன்னிடம் கூறும்படி, எமது கலத்தின் காவலன், என்னை அனுப்பியுள்ளான், என்று கூறி விட்டுப் படகேறிச் சென்றான்.

பத்திரிகைகளை, ஆவலுடன் பிரித்தான், படித்தான்.

புதிய படக்காட்சிகள் பற்றிய விவரம் கண்டான்; தனக்கு மிகவும் பிடித்தமான நடிகையரின் படங்களைப் பார்த்தான், பரவசமடைந்தான்.

நாடகம், இசை, நாட்டியம், நாகரிக நிகழ்ச்சிகள், பற்றிய குறிப்புகளைப் படித்தான், பேரானந்தம் பிறந்தது.

பிறகு, நாட்டு நிலை, அரசியல் நிலை, பொருளாதார நிலை, இவைபற்றிப் படிக்கலானான்: மகிழ்ச்சி உலரலாயிற்று; மருட்சி பிறந்தது.

உலகிலே, பல்வேறு இடங்களிலே, இல்லாமையால் தாக்கப்பட்ட மக்கள் படும் அவதி, அவர்களை அடக்கி ஒடுக்கிவைக்க ஆட்சியாளர் அவிழ்த்துவிடும் அடக்குமுறைகள், அந்த அடக்குமுறைகளை எடுத்துக் காட்டி ஆவேசமூட்டி, அந்த ஆட்சியினைக் கவிழ்த்திட எதிர்க்கட்சிகள் செய்திடும் முயற்சிகள், படுகொலைகள், சதிச்செயல்கள், அடுத்துக்கெடுத்திடும் அக்ரமம், அணைத்து அழித்திடும் பயங்கரம்—ஆகியவற்றினைப் பற்றிய விளக்கங்களைப் படித்தான் — நாடா, காடா இந்த இடங்கள்? என்று எண்ணத் தோன்றிற்று! அருவருப்பும் அச்சமும், அவன் உள்ளத்தை உலுக்கிடலாயின!

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட நாசம் பற்றிய குறிப்பு, பெருவெள்ளம், தீ, ஆகியவற்றால் ஏற்பட்ட அழிவு, பஞ்சமும் நோயும் ஏற்படுத்திவிட்ட பாழ்நிலை, ஆகியவைபற்றிய விவரம் படித்தான்—பயந்தேபோனான்.

பாராளுமன்றங்களிலே நடைபெறும் பேருரைகள், நாட்டிலே செல்வம் பெருகிவருவதைக் காட்டுவனவாக இருந்தன; பத்திரிகையிலே மற்றோர் பகுதியில், பிழைப்புக்கு வழிதேடிக் கண்காணா நாடு சென்று கடுமையாக உழைத்தும் கதியற்றுக்கலங்கிடும் மக்கள் பற்றி, உருக்கமாக வரையப்பட்ட, கட்டுரைகள் இருந்தன!

கர்த்தரின் கருணைபற்றிய பாசுரமும், அதற்கான பொருள் விளக்கமும் ஒரு பக்கம் இருந்திடக் கண்டான்; பிறிதோரிடத்தில், பெற்ற குழந்தையின் கழுத்தை நெரித்துச் சாக்கடையில் வீசிடும் 'கன்னித்தாய்' பற்றிய குறிப்பு இருந்தது!

சீமாட்டி வாங்கிய வைரமாலையின் மதிப்புப்பற்றி, நிபுணர்கள் கருத்து வேற்றுமையை எழுதி இருந்தனர்; பசிக்கொடுமைக்காகத் திருடிய சிறுவனுக்கு, இருபது சவுக்கடி கொடுத்திடச்சொல்லி, வழக்கு மன்றம் தீர்ப்பளித்ததைப்பற்றிய கருத்துக்கோவையும் காணப்பட்டது.

பிடிபட்ட வேங்கைபற்றிய செய்தியும், பிடிபடாத கொலைகாரனைப்பற்றிய தகவலும், ஒரே இதழில் இருந்திடக் கண்டான்.

கள்ளச்சந்தை நடத்துபவனுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுத்துப்பேசிய அமைச்சரின் அஞ்சா நெஞ்சத்தைக் கண்டு மகிழ்ந்தான்; அடுத்த பக்கத்திலேயே, அறுபத்துநாலுவகை பதார்த்தத்துடன், அமைச்சருக்கு, ஒரு கொள்ளை இலாபக்காரன், நடத்திய விருந்துபற்றிய விவரம் வெளிவந்திருக்கக் கண்டான்.

புதிதாகக் கட்டப்பட்ட அரசமாளிகைக்குச் செலவான பணத்தின் கணக்கு ஒருபக்கம் தரப்பட்டிருந்தது; மற்றோர் பக்கமோ புற்றுநோய்க்குப் பலியானவர்களின் தொகை பெருகிவருவதைக் காட்டிடும், புள்ளிவிவரம் இருந்திடக்கண்டான்.

உளவுவேலை பார்த்துக்கொண்டே உறவாடும் போக்கினர் உயர் இடங்களிலே இருப்பதைக் கண்டான்; இருக்கும் இடமிருந்தவண்ணமே இலக்குகளை அழித்திடும் போர்க் கருவிபற்றிப் பேசிப் பீதிகிளப்பிடும் பெருந்தலைவர்களின் சீற்றத்தைப் பார்த்தான். அவரவர் அவர்வழி என்ற கருத்தினைப் பேசிடும் அறிவாளரையும் கண்டான்; அடுத்த பலி, எது என்று மோப்பம்பிடித்தலையும் வெறியரையும், பத்திரிகை படம்பிடித்துக் காட்டிற்று. மனிதகுலம் ஒன்றுதான் என்று பேசி, மதிப்புப் பெற்றிடும் மகான்களையும், இதழ்கள் பாராட்டின; கருப்பு, வெள்ளை, மஞ்சள், சிகப்பு என்று நிறபேதம் காட்டிடும் கொடியோருக்குக், கொடியும் படையும், கொற்றமும் ஏற்றமும் இன்னும் இருந்திடும் கொடுமையையும் காட்டின, இதழ்கள்!

பிரித்துப் பிரித்துப் படிக்கிறான், தொல்லை நிரம்பிய உலகம், கொடுமை கக்கிடும் உலகம், அநீதி நெளி

யும் இடங்கள், ஆபத்துச் சூழ்ந்தநாடுகள் — இவைகளைத்தான் காணமுடிந்தது.

அங்கல்லவா, போகவேண்டும்? என்று எண்ணினான்—உடல் பதறிற்று, உள்ளம் கொதித்திடலாயிற்று.

மரமும் செடியும், கொடியும் தழையும், இங்கு; எத்தனை காலத்துக்கு இவைகளைப் பார்த்தபடி இருப்பது, என்று ஏக்கம் பிறக்கிறது; உண்மை; ஆனால், அங்கு? மாடமாளிகையும் மண்குடிசையும், பக்கத்துக்குப் பக்கம் உள்ளன; அன்புமொழி பேசுவோரும் அழித்தொழிக்கும் போக்கினரும், அடுத்தடுத்து உள்ளனர்; அங்கல்லவா செல்லவேண்டும்? நிலநடுக்கத்தால் சாவோ, தீராதநோய் தாக்கி மரணமோ, மெள்ள மெள்ளக் கொன்றிடும் பஞ்சம்தான் பிடித்துச் சாகடிக்குமோ—என்னகதியோ, யாது முடிவோ! எனக்காக எது காத்துக்கொண்டிருக்கிறதோ — தடியோ, துப்பாக்கிமுனையோ, கயவரின் கத்தியோ, காவலரின் கடும் சிறையோ—யாதோ!—என்று எண்ணும்போது அப்படிப்பட்ட ஆபத்துச் சூழ்ந்த இடத்திற்குச் செல்லத்தான் வேண்டுமா, என்றஐயப்பாடு தோன்றுகிறதே! அச்சம்கூட ஏற்பட்டுவிடுகிறதே!! என்ன செய்யலாம்? போகலாமா? வேண்டாமா? இங்கேயே இருந்துவிடுவதா? அங்கு செல்வதா?—என்று எண்ணினான், நெடுநேரம். பிறகோர் முடிவுக்கு வந்தான்! தீவிலேயே இருந்துவிடுவது என்று!!

•

தம்பி! யார் இவன்; என்று கேட்கமாட்டாய். கருத்து விளக்கத்துக்கான, கதைவடிவம் என்பது உனக்குத் தெரியாதா, என்ன!

உலகம், இன்றுள்ள நிலைபற்றிய செய்திகள் பலவற்றைப் பார்த்திடுவோருக்கு, தீவே போதும், நாகரிக அரசுகள் உள்ளன என்ற விருது காட்டப்படும், நாடுகள் பலவும், இன்று எந்தச் சமயத்திலே, நாசத்தைக் கக்கலாம், எவரை அழித்திடலாம், என்று துடித்துக்கொண்டு, தொடை தட்டிக்கொண்டு நிற்கும் நிலை தெரிகிறது; தெரிவதால், அருவருப்பும் அச்சமும் மனதிலே புகுந்து குடையவும் செய்கின்றன. என் காலத்திலேயே, மற்றோர் போர் வந்து மூண்டுவிடும் போலிருக்கிறது, என்று ஆச்சாரியார் பேசியிருக்கிறார், அல்லவா! அவ்விதம் எண்ணி, மருளத்தக்க விதமாகத்தான், உலகின் நிலையும், நடவடிக்கைகளும், உள்ளன.

சென்ற கிழமை, கூடிய, பெருந்தலைவர்கள் மாநாடு, என்ன அலங்கோல நிலை காட்டிற்று! கோடிக்கணக்கான மக்களின், நல்வாழ்வுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கும், அந்தப் பெருந்தலைவர்கள், அதிலும் குறிப்பாக இருவர்—இருபெரும் நாட்டுத் தலைவர்கள்—கோபதாபத்துக்கு ஆட்பட்டுக், கூடிப் பேசவும் மறுத்துவிட்டனர், கண்டாயல்லவா?

அந்தத் தலைவர்களின் பேரப்பிள்ளைகள், பள்ளியிலே, என் புத்தகத்தைக் கிழித்தவனல்லவா நீ? உன்னோடு எனக்கென்ன பேச்சு! என்று சண்டை போட்டுக்கொள்கிறார்களோ இல்லையோ, இவர்கள், அதே முறையிலல்லவா, நடந்துகொண்டுள்ளனர்.

கோடி கோடி மக்கள், இவர்கள் கூடிப்பேசி, பகை ஒழியவும், பண்பு வளரவும், நேசம் மலரவும், நீதி தழைக்கவும் வழி காண்பர்! அச்சத்தாலும் அருவருப்பாலும், ஆதிக்க வெறி உணர்ச்சியாலும், உந்தப்பட்டுப், பணத்தைப், பயங்கரப் போர்க் கருவிகளுக்குப் பாழாக்கும் முறை ஒழிந்து, மக்கள் அனைவரும், பசியின்றி, நோயின்றிப், பயமின்றிப், பண்புடன், கூடி வாழ்ந்திட வழி காண்பர்—பெரும் பொருளை அதற்கே செலவிடுவர், என்று எத்துணை ஆவலோடு எதிர்பார்த்து நின்றனர். இடையே உள்ளவர்களின் இறுமாப்பினாலேயே இடர்ப்பாடுகளிலே பெரும் பகுதி ஏற்பட்டுவிடுகின்றன, 'மூலவர்கள், ஒன்றுகூடிப் பேசினால், மூடுபனி கலைவது போலப் பகை நோக்கு ஒழியும், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ள இயலும், அதற்காக பெருந்தலைவர்கள் கூடிப் பேசவேண்டும் என்று, பல காலமாக் கூறப்பட்டது; ஆனால் கூடினர், பேச அல்ல! பேசமுடியாது என்று கூறிவிட்டுக் கலைந்திட!

நேசக்கரத்தை நீட்டவேண்டிய நேரத்தில்தானா, அமெரிக்கா, சோவியத் நாட்டின்மீது, வேவு பார்க்க விமானத்தை ஏவவேண்டும்!! கூடிப்பேச, ஏற்றதோர், சூழ்நிலை அமைக்கும் செயலாகுமா, இது? ஏன் இந்த, நம்பிக்கையற்ற போக்கு, அவசர நடவடிக்கை?

விஞ்ஞானத்தின் துணையை, மற்ற எந்த நாட்டினையும்விட மிக அதிகமாகவும், வேகமாகவும், நேர்த்தியாகவும் பெற்று, உலகின் எந்தக் கோடியினையும், கண்டறிய, படமெடுக்க, வசதியினைப் பெற்று; செயற்கைக் கிரகங்களை அடுக்கடுக்காக அனுப்பிக்கொண்டிருக்கும் சோவியத் முறை, விஞ்ஞான வளர்ச்சியை மட்டுமா, காட்டி வருகிறது! புதியதோர் வேவு பார்க்கும் முறை அல்லவா, அது!

அமெரிக்கா அனுப்பிய வேவு விமானம்பற்றி, வெகுண்டு பேசிவிட்டாலும், எதிர்காலம்பற்றிக் கலந்துபேச, மாநாடு நடத்தக்கூடாதா, சோவியத்!

“முடியாது! முழங்காற்படியிட்டபடி, மன்னிப்புக் கேட்டாகவேண்டும், அமெரிக்கத் தலைவர், அப்போதுதான், பேச இசைவேன்” என்று சோவியத் தலைவர் அறிவித்துவிட்டார்.

அதற்கு அமெரிக்கத் தலைவர் இணங்குவார், என்று எவரும், எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்த்தால், மாநாட்டுக்குப் பெருந்தலைவர்கள் மாநாடு என்ற பெயரே பொருந்தாது!!

ஆனால், ஏன், இருபெருந்தலைவர்கள், இந்த முறையில் நடந்துகொண்டனர்?

'கூடி வாழ்வது' என்ற கொள்கைபற்றி இருவரும், பேசாத நாளில்லை. போர் அறவே கூடாது! மூண்டிடின், இது உலகை அழித்தொழிக்கும் போராகிவிடும்—என்று இருவரும் உரைக்கின்றனர்; உணருகின்றனர்.

எனினும், இருவரும், தத்தமது போக்கினைத் துளியும், மாற்றிக்கொள்ள ஒருப்பட்டாரில்லை; மாற்றிக்கொள்வது தம் தரத்தைக் குறைத்துவிடும், என்ற தவறான ஓர் கருத்துக்கு அவர்கள் ஆட்பட்டுக் கிடப்பதால்.

பாலேடு திருடிய பூனைக்குட்டியை, என் தாய் கண்டுபிடித்து, அதைத் தூக்கி, அதே பாலேட்டிலே, பூனையின் மூக்கைத் தேய்த்துப் புத்தி புகட்டினார்கள்—நான் சிறுவனாக இருந்தபோது; அதுபோலத்தான், வேவு பார்த்த அமெரிக்காவுக்குப் புத்தி புகட்டவேண்டும என்று விரும்புகிறேன்—என்று குருஷேவ், ஒரு கதையும் கூறியிருக்கிறார்.

தாயாருக்கு இருந்த கோபம், இப்போது இவருக்கும் இருக்கிறது, என்பது தெரிகிறது. ஆனால், அன்று, அவருடைய அன்னை, கோபத்தின் காரணமாக அர்த்தமற்ற காரியத்தைச் செய்தது போலவா, அகிலத்தில் அமைதி நிலவவேண்டும் என்ற அறிவு அறிந்த பருவத்திலுள்ள மகனும், செய்ய முற்படவேண்டும்!!

பூனையின் மூக்கைப் பாலேட்டிலே வைத்துத் தேய்த்ததால், கோபம் குறைந்திருக்குமே தவிர, பாலேடு கூடியா இருக்கும்!! பூனை தின்றதுபோக, மிச்சமிருந்ததுமல்லவா, கெட்டுப் போயிருக்கும். தாயார், அதைச் செய்தபோது குருஷேவ், சிறுவர்! இப்போது?

•

"எமது மாபெருந் தலைவனின், வீரத்தைக் காணீர்! தன்மானம், உயிரினும் பெரிது! என்பதைத் தரணிக்கே, எடுத்துக்காட்டிய, எமது இணையிலாத் தலைவரின் தரத்தை மிஞ்ச முடியுமா, கூறீர்!! ஆணவம் பிடித்த அமெரிக்க அரசுக்கு, கொடுத்தார் ஓர் அறை! இறுமாப்புக்கொண்ட ஏகாதிபத்தியத்துக்குக் கிடைத்தது பலமான தாக்குதல்!!—" என்று சோவியத் மக்கள், குருஷேவை எழுச்சியுடன், பாராட்டத்தான் செய்வார்கள்.

"பதறுவது, பண்பாளரின் முறை அல்ல! துடுக்குத்தனமாகப் பேசியதைக் கேட்டும், துளியும் பதறாமல், பதிலுரைக்காமல், பண்புடன் நடந்துகொண்டார், எமது தலைவர்! பாரோரே! பாரீர்! அவர் வழி வந்து சேரீர்!!" என்று, அயிசனோவரை, அமெரிக்க மக்கள் பாராட்டி வரவேற்பர்.

ஆனால், பெருந்தலைவர்கள் எனும் பெறுதற்கரிய இடத்தைப் பெற்ற நிலையில், அவர்கள், தம்மைச் சூழ நிற்கும், சாமான்யர்களின் பாராட்டுதலை அல்ல, உலகத்தின் பாராட்டுதலை, அல்லவா, பெறத்தக்க போக்கினை மேற்கொண்டிருக்கவேண்டும்?

உலகம், இவரிருவரிடமும், எவ்வளவு எதிர்பார்க்கிறது! இவர்களோ, எவ்வளவு எளிதில், எவரையும் வீழ்த்திவிடத்தக்க கோபதாபத்துக்கு இடமளித்துவிட்டனர்!! இவ்வளவு உயரிடம் பெற்றதும் இதற்கோ?

மாநாடு, நடைபெற்று, குருஷேவ், உலகிலே போர்ப் பயம் ஏற்படாதிருக்க வழிகூறிக், கலந்துரையாடித், திட்டம் வகுத்து, ஒப்பம்பெற்றுக் கடைசியில். 'இத்துணையும், உலகு அமைதிபெற நான் எடுத்துக்கொள்ளும் முயற்சியாகும். ஆனால் உலகீரே! இதோ, இங்கு நான் புறப்படும் நேரமாகப்பார்த்து, அமைதி விழையும் அயிசனோவர், அகிலம்தழைக்க வழிதேடும் அமெரிக்கத் தலைவர், எனது நாட்டின்மீது வேவு விமானம் அனுப்பினார்; வீழ்த்தினர் எமது படையினர்; வெகுண்டனர், எமது மக்கள்; எனினும் அவர்களுக்கு நான் சமாதானம் கூறிவிட்டுச், சாந்தப்படுத்திவிட்டு, இங்கு வந்தேன்! வலிவுகுறைவு, என்பதால் அல்ல!! வலிவு மிகுதி, எம்மிடம், என்பதனால்! வேவு விமானம் அனுப்புகிறது அமெரிக்கா! பாவம்! அதுவும் வெந்து கருகிக்கிடக்கிறது எமது மண்ணில்! வானவெளியில் சுற்றிவருகிறது, எமது விஞ்ஞானக் கருவி!! பூமி, அல்ல, எமது இலக்கு! பூலோகத்தார் எண்ணி எண்ணி விளக்கம் காணாது, இருந்து வருகிறார்களே, வானவெளிபற்றி, அங்கு காணப்படும் 'உலகுகள்' பற்றி—அவைகளைக் கண்டறிகிறோம்—அறிவுத்துறையில் வென்று வருகிறோம்! அறிவீர்! அறிவீர்!!" என்று பேருரை நிகழ்த்தி இருப்பின்—அயிசனோவர், வெட்கத்தால், குன்றிப்போயிருப்பார்; குருஷேவின் தரம், பன்மடங்கு, உயர்ந்திருக்கும். ஆனால், அவருக்கு 'அப்போதைக்கப்போது கிடைக்கிடும் ஆனந்தம்'தான், பெரிதாகத் தோன்றியிருக்கிறது; அடித்துப் பேசினேன், அயிசனோவர் அடங்கிக்கிடந்தது கண்டேன்! என்று பேசி மகிழத்தான் அவருக்கு எண்ணம் பிறந்தது.

குட்டக் குட்டக் குனிந்து கொடுப்பதா! கோழையாகிவிடுப்பதா! தனிப்பட்ட முறையில் இழிவு, என்றால்கூடப் பரவாயில்லை, நாட்டுக்கு இழிவு ஏற்படும் நடவடிக்கையில் ஒரு அந்நியநாடு ஈடுபடுவது. அதைப் பார்த்தும், கைகட்டி வாய்பொத்தி நிற்பதா! அது எனினும் ஏற்கக்கூடாத இழுக்கல்லவா?—என்று, கேட்கக்கூடும்; கேட்பதிலே, நியாயம் இல்லை என்றும் கூறுவதற்கில்லை. எனினும், தாங்கிக்கொள்ளவே முடியாது—சகித்துக்கொள்ளவே முடியாது— என்று தோன்றும்போது, சகித்துக்கொள்வதும் தாங்கிக்கொள்வதும், தலை இறக்கத்தை அல்ல, மனிதத் தன்மையின் மாண்பினை மலை அளவு ஆக்கிடவல்லது. மிகச்சிலராலேயே, இது முடியும்! அந்த மிகச்சிலரே உலகுக்குப் பாடம் தரவல்லவராகின்றனர்.

பணிந்துபோய்விட்டான் — போர்க் குணத்தை இழந்துவிட்டான்—என்று எங்கே, பிறர், தாழ்வாகக் கருதிவிடுவார்களோ, என்ற அச்சமே, குருஷேவ் கொண்டதுபோன்ற போக்கினுக்குக் காரணம்.

ஓரளவுக்கு, இதிலே கவனிக்கத்தக்க, புறக்கணிக்கமுடியாத, உண்மையும் தொக்கி நிற்கத்தான் செய்கிறது.

பாரிஸ் மாநாட்டிலே, குருஷேவ், கோபதாபத்தை அடக்கிக்கொண்டு, கூடிப்பேசியிருந்திருந்தால், சோவியத்திலே, சிலராகிலும், 'சேச்சே! குருஷேவ் என்ன இப்படிக் குனிந்து கொடுத்துவிட்டாரே! தலை இறக்கமாக அல்லவா இருக்கிறது! ஸ்டாலின், இப்படி இருந்திருக்கமாட்டார்! பொறிபறக்கப்பேசி இருப்பார்! போக்கிரிகள் கூடிப் போதனை நடத்துவதா? காலிகள் கூடி ஒழுக்கம் காண்பதா? என்று கேட்டுவிட்டு தன் கோபப்பார்வையால், மாற்றாரின் ஆணவத்தைச் சுட்டுச் சாம்பலாக்கிவிட்டு, வெற்றி வீரராக மாஸ்கோ வந்திருப்பார்! இந்தக் குருஷேவுக்கு முதுகெலும்பு இல்லை!!" என்று கேலி பேசிடக்கூடும். ஆனால் அவர்கள், ஏற்படக்கூடிய 'விளைவுகளுக்கு'ப் பொறுப்பேற்போர் அல்ல! அந்தப் பொறுப்பு அவர்களுக்கு இல்லாததாலேயே, அவர்கள், வீரத்துக்கு இலக்கணம் கூறிடும் விற்பன்னர் வேலைக்கு, வருகிறார்கள். தம்பி! மிகப் பெரிய விஷயத்திலிருந்து, மிகச்சாமான்யனை நான் சம்பந்தப்பட்ட, மிகச் சாதாரண விஷயத்துக்கு, வருகிறேன்—'பொறுத்திடுக! — திராவிடர்கழகத்திலிருந்து, விலகிய நேரம்—புதிய அமைப்புக் காணுதமுன்பு—காண்பதற்காக, பலர் கலந்துபேசக் கூடினோம்—சென்னை, முத்தியாலுப்பேட்டைப் பகுதியில்—தெருவின் பெயர் நினைவில் இல்லை. அப்போது ஒருவர்—அப்போது அன்பர் வரிசையில் இருந்தவர்தான்—ஆவேசம் எழப் பேசினார்.

"திராவிடர் கழகம், நம்முடையது—ஆமாம்—நம்முடையது! நாம், அறிவிக்கவேண்டும், சர்க்காருக்கு, மக்களுக்கு, பெரியாருக்கு, அனைவருக்கும். "விடுதலை' பத்திரிக்கை, நம்முடையது! நாம்தான் நடத்தவேண்டும்! நேரே, போகவேண்டும்; அங்கே உள்ளவர்களைப் பார்த்து, இது எமது இடம், உமக்கு இடமில்லை, போங்கள் வெளியே என்று கூறிவிடவேண்டும்! நாம், ஏன் நம்முடைய உடைமையை, உரிமையை, பிறருக்குக் கொடுத்துவிட்டு, வேறு பெயருடன் வேலை துவக்குவது?" என்றெல்லாம் பேசினார். வீரம் கொப்பளித்தது. பேச்சில். கேட்டோர், என்னைப் பார்த்த பார்வையில், கேலி நிரம்ப! என் முகத்திலே ஒரு கணம், அசடு வழிந்தது என்றுகூடச் சொல்லலாம்!!

"அம்முறைதான் உகந்தது என்று கருதினால், கூறிடும் 'அன்பர்' முன்னின்று நடத்தட்டும் — நான் அதற்கு ஏற்றவன் அல்ல! என் முறையும் அது அல்ல! ஒருபோதும் அம்முறைகொள்ளும், போக்கினனுக மாட்டேன்." என்று கூறினேன்—தம்பி! அவ்வளவு வீரம் பேசியவர், இப்போது, திராவிடர் கழகத்தில் இருக்கிறார்; நமது கழகம், நான் அன்றுகொண்ட 'பொறுமை'யால் கெட்டுப்போய்விடவில்லை. ஆனால், நானு, குருஷேவ்! அவரால், எப்படிப் 'பொறுமை'யாக இருக்கமுடியும்!!

வீரமான காரியம், என்று, விரல்விட்டு எண்ணக்கூடிய சிலருடைய, பாராட்டுதலைப் பெறத்தக்க விதத்தில், நாம் துவக்க நாட்களில், நடந்துகொண்டிருந்திருந்தால், கழகம் அல்ல, தம்பி! கலகம், வளர்ந்திருக்கும்.

குருஷேவின் கோபமோ அயிசனேவரின் போக்கோ, அவ்விருவரின் குடும்பத்தை மட்டுமே பாதிக்கக்கூடியதாக இருந்தால், பொருட்படுத்தத் தேவையில்லை. அவர்கள், காரணமற்றுக் கோபித்துக் கொண்டாலும், பொறுமையைக் கடைப்பிடிக்கத் தவறினாலும், பலகோடி மக்களின் வாழ்வு பாதிக்கப்பட்டுவிடும்—எனவேதான், அவர்களின போக்கு பற்றி, மன்றங்களில் மட்டுமல்ல, மனைகளிலும் பேசுகிறார்கள்.

தனிப்பெருந் தலைவர்களாகிவிட்டவர்களின், சொந்த விருப்பு வெறுப்புகள், கோபதாபங்கள் காரணமாகவே, போர்கள் மூண்டதுண்டு! போரிலே, அவர்கள் அல்ல, அவர்களுக்கு வாழ்த்தொலி கூறிய மக்கள்தான் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

காரணமற்றுக்கூடக் கோபம் ஏற்பட்டுவிடுமா என்று கேட்கிறாயா, தம்பி! தனிப்பட்டவர்கள்மட்டுமல்ல, நாட்டு மக்களே, காரணமற்றுக் கோபத்திலே சிக்கியதால் பெரும்போர் மூண்டதுண்டு.

ஜென்கின்ஸ் எதுக்காகச் சண்டை! என்று கேள்விப் பட்டதுண்டா?

இங்கிலாந்து நாட்டுக் கப்பற்படை, ஈடற்ற வலிவுடன் விளங்குவது கண்டு, அதனை அடக்க ஒடுக்க, பிரான்சும், ஸ்பெயினும், பலமுறை முயன்றன. அப்படிப்பட்ட, போர்ச் சூழ்நிலையும், போரை மூட்டிவிடத்தக்க பகை உணர்ச்சியும் பரவி இருந்த நேரம்.

ஜென்கின்ஸ் என்பவன் பிரிட்டிஷ் கடற்படையில் இருந்த தளபதி.

எதிரி நாட்டவர், அந்தத் தளபதியைப் பிடித்திழுத்துச் சென்று, அவன் காதை வெட்டிவிட்டார்கள், என்றோர், வதந்தி பிரிட்டனில் உலவிற்று. வதந்தி, என்று இப்போது நான் எழுதுகிறேன், தம்பி! அப்போது, அது 'செய்தி' என்றே நம்பப்பட்டது.

"கேட்டீர்களா, அக்ரமத்தை! நமது ஜென்கின்சுடைய காதைப் படுபாவிகள், வெட்டிப் போட்டு விட்டார்களாம்."

"தளபதி ஜென்கின்சுக்கா இந்த அவமானம் நேரிட்டது."

"கொடுமை செய்தவன் கொட்டமடிக்கிறான்; இங்கோ நாம் கூடிக் கதை பேசுகிறோம்."

"இரத்தம் கொதிக்கிறது, செய்தியைக் கேட்டதுமுதல்."

"நாம் என்ன மரக்கட்டைகளா, சும்மா இருக்க."

"பழிக்குப் பழி! காதுக்குக் காது! கண்ணுக்குக் கண்!'

"ஆமாம்! உடனே! இப்போதே."

"போர்! போர்! போர்!"

அங்காடியில் அலுவலகத்தில், பாடி வீட்டில் மாடிகளில், தோட்டத்தில் கடலோரத்தில், சீமாட்டியின் சிங்காரமாளிகையில் கொல்லன் உலைக்கூடத்தில் — எங்கும் கிளம்பிற்று, இந்தவிதப்பேச்சு! தம்பி! போரே, மூண்டுவிட்டது. எவ்வளவோ, அழிவு! கடைசியில் தான், உண்மை தெரிந்தது, ஜென்கின்ஸ் என்ற தளபதியை எவனும் பிடித்திழுத்துச் செல்லவுமில்லை, காதை வெட்டிப் போட்டுவிடவுமில்லை! காது, இருந்தது ஜென்கின்சுக்கு; ஆனால், காது அறுத்தார்கள் என்று வதந்தி பரவினதால், போர்மூண்டிட, பலருக்குக் கண்போயிற்று, கால் போயிற்று, கரம் போயிற்று, சிரமேகூடப் போயிற்று! ஒரு நாட்டு மக்கள் அவ்வளவு பேரும், காரணமற்றுக் கோபப்பட்டதால், கடும்போர் மூண்டிருக்கிறது.

இன்று, உலகு இருக்கும் நிலைமை, ஒரு சிறு வதந்தி, செய்தி வடிவமெடுத்தால்கூடப் போதும், மக்களை ஆத்திரம்கொண்டிடச் செய்திடும் — அமளி மூண்டுவிடும். பெருந்தலைவர்களே, மிக எளிதாக ஆத்திரப்பட்டுவிடுகிறார்களே — விவரம் விளக்கம் கிடைக்கப்பெறாமல் இருக்கும், மக்களைப்பற்றிக் கூறவாவேண்டும்.

எனவேதான், பலருக்கும் இன்றுள்ள நிலையில், போர் எந்த நேரத்திலும், மூண்டுவிடக் கூடும், என்ற பயம் இருக்கிறது.

பாரிஸ் மாநாடு முறிந்தது, இந்தப் பீதியை வளரவைத்துவிட்டிருக்கிறது.

பாரிஸ் மாநாடு முறிந்ததற்குக் காரணம் என்ன என்பதுபற்றி, பெருந்தலைவர்கள், அறிக்கைகள் வெளியிட்டனர்—விளக்கம் கிடைத்தது. ஆனால், அதைத் தொடர்ந்து, இருநாட்டுத் தலைவர்களின் அலுவலகத்தார், நிபுணர்கள், செய்தி அறிவிப்போர் செய்திகளுக்கு விளக்கம் கூறுவோர், என்ற பல்வேறு பெயருடன் உள்ளவர்கள், பாரிஸ் மாநாடு குறித்துப் பேசுவதும் எழுதுவதும், விளக்கத்தை அல்ல, விவேகத்தையும் அல்ல, விரோதத்தை மூட்டவே பயன்பட்டு வருகின்றன.

உலகப் பெரும்போர் மூளாதிருக்கத்தக்க விதத்திலே எண்ணவேண்டும், எழுதவேண்டும் என்ற அடிப்படையை மறந்து, அயிசனோவர் கட்சி, குருஷேவ் கட்சி, என்று தாமாகவே, வேலை தேடிக்கொள்கிறார்கள் சிலர்; அவர்கள், அந்த இருவரும் எண்ணிக்கூடப் பார்க்காததை எல்லாம் காரணங்களாகக் கற்பித்துக்கொண்டு பேசுவதும் எழுதுவதும், நல்லதற்கு அல்ல என்று துணிந்து கூறலாம்.

•

தம்பி! மெத்தக்கற்றவர் ஒருவர், இரயிலில், சென்றுகொண்டிருந்தார். இட நெருக்கடி. வழியிலே, அவருடைய அருமை பெருமைகளைப் போற்றிடத் தெரிந்த ஒரு நண்பர், இரயிலில் ஏறினார். தன் பெருமதிப்புக்குரியவர், இட நெருக்கடியில் சிக்கிக் கிடப்பதைக் கண்டார்; சங்கடமாக இருந்தது; பதைத்து, அருகே சென்றார்.

"தாங்களா! இந்த இட நெருக்கடியிலா? ஏன் இந்த மூன்றாம் வகுப்பு வண்டியில் ஏறினீர்கள்? இடம் இருந்தால்கூடத் தரமாட்டார்களே. முதல் வகுப்பில் போயிருக்கலாமே. இவ்வளவு கஷ்டப்படுகிறீர்களே! அதோ ஒரு ஆசாமி, காலை நீட்டிப் படுத்துக்கொண்டிருக்கிறான். இங்கே நீங்கள் இப்படி ஒடுக்கிக்கொண்டிருக்கிறீர்கள்" என்றான், பரிவுடன்.

"பரவாயில்லை. இடம் கிடைத்ததே, அது போதும்" என்றார், அவர்.

இதற்குள் நண்பன், அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, தூங்கித் தூங்கி அவர் மேலே சாய்ந்து சாய்ந்து விழுந்துகொண்டிருந்

ஒருவரைக் கவனித்துவிட்டு, மெல்லத் தட்டி எழுப்பி, "ஐயா! அவர் மேலே, விழுகிறீர்களே! கொஞ்சம், தள்ளி உட்காருங்கள். பாருங்கள், அவர் எவ்வளவு இடுக்கிலே கிடக்கிறார். கொஞ்சம் தள்ளி, இடம் கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டான். அவர், ஒரு தடவை விழித்துப் பார்த்து, கனைத்துக் காட்டிவிட்டு, மீண்டும் பழையபடியே தூங்கலானார். நண்பனுக்குக் கோபம். கொஞ்சம், அதட்டும் குரலில், அந்த ஆசாமியை எழுப்பி, "இரயில் என்னய்யா, உங்க பாட்டன் வீட்டுச் சொத்தா! அவரை இப் படிப்போட்டு, இடித்துத் தள்ளிக்கொண்டு இருக்கிறீரே. அவர், யார் தெரியுமா? அவருடைய யோக்யதை என்னவென்று தெரியுமா? திருவாசகத்திலே புலி, ஐயா, புலி! தேன் சொட்டும், அவர் தேவாரம் பாடினால்! தெரியுமா?" என்றான்.

விழித்துக்கொண்டிருந்த ஒரு குறும்புக்காரன், "அப்படியானால், பாடச் சொல்லு, தாளத்தைத் தட்டிக்கொண்டு" என்றான்.

"அட, விவரமறியாதவர்களே! அவர் பெரிய வேதாந்தி! பெரிய புள்ளி! போனமாதம், பொன்னாடைபோர்த்திப் பத்தாயிரம் ரூபா பரிசு கொடுத்தார்கள். அவருடைய யோக்யதை தெரியாமல், உளறுகிறீர்களே!" என்று, சிறிது கோபத்துடன் கூறினான்.

"வேதாந்தியா...... யாரு? இந்த மூஞ்சியா? அவன் யாரா இருந்தா எனக்கென்ன? காலிலே விழுந்து கும்பிடணுமா! ஏன்!, அவன்தான் என் காலிலே விழுந்து கும்பிடட்டுமே!" என்று வலுச் சண்டைக்கு இழுத்தான் ஒரு வம்புக்காரன்.

"கண்ணைப்பாரு கோட்டான் மாதிரி!"

"சாமியாரு! கஞ்சா சாப்பிட்டிருப்பாரு!"

"ஆள் ஏமாந்தா, மூட்டையை அடிக்கிற பயலெல்லாம் கொட்டை கட்டிக்கிட்டு, வேஷத்தைப் போட்டுகிட்டு, ஊரை ஏமாத்துறானுங்க..."

பலர் பலவிதம் பேசினர், கேவலமாக.

நண்பனொருவன், தன் பற்றினைக்காட்டுவதற்காகப் புகழ்ந்து பேச, மற்றவர்கள் அதனாலேயே எரிச்சல் கொண்டு, ஏசினர்.

இடம் பெற்றுத்தர முடியாது போனாலும் இழிமொழியை வாங்கித்தர முடிந்தது, நண்பனால்.

அதுபோன்றே தம்பி! பெருந்தலைவர்களில் தமக்குப் பிடித்தமானவரைப்பற்றி 'விமர்சனம் செய்வோர்' புகழ்ந்து எழுத, அதனாலேயே அருவருப்பு அடைந்த மற்றவர், அந்தத் தலைவரைப்பற்றித் தாறுமாறாக ஏசி எழுதுகிறார் — ஆண்டவனே! என் நண்பர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று! என்று அந்தத் தலைவர்கள், கூறிடவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

சூழ்நிலை கெடுவதும், பாழ்நிலை ஏற்படுவதும், இத்தகைய முறையினரின் போக்கினால்தான்.

ஒவ்வோர் நாளும், பாரிஸ் மாநாடுபற்றி, ஒவ்வொருவர் தத்தமக்குப் பிடித்தமான கண்ணோட்டத்தைக்கொண்டு, எழுதிவரும் கட்டுரைகள், நல்ல நிலையை வளரச்செய்ய அல்ல—கெடுக்கத்தான் பயன் படுகின்றன.

மிகச்சிலர் தவிர, பலரும், தமக்குள்ள வேலைத் தொல்லையினால், பிரச்சினைகளைப்பற்றித் தாமாகவே சிந்திக்க இயலுவதில்லை. 'விமர்சனம்' செய்வோர், செய்தளிக்கும் 'சிந்தனை'யை அவர்கள் விலை கொடுத்து வாங்கித், தவறான கருத்தைக்கொண்டு விடுகிறார்கள்.

தம்பி! பிரச்சினைகளை நாமாகவே, அலசிப்பார்த்துக் கருத்தினைக் கொள்ளவேண்டும்; நமக்காக வேறொருவர், தயாரித்துத்தரும் 'கருத்து' கவைக்கு உதவாது.

பாரிஸ் மாநாட்டிலே குருஷேவ் கொதித்த உள்ளத்தோடு இருந்தாலும், கூர்ந்து பார்த்து, நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்த்தாமானால், கொதிப்புக் குறைந்ததும் தெரியும்—மீண்டும் கூட வழி தேடத்தான் போகிறார்கள் என்பதும் புரியும்.

இந்தநேரத்தில், பிரிட்டிஷ் மாக்மிலனும், பிரஞ்சு நாட்டு தெ'கோலும், மிகப் பொறுப்புடன், நடந்து கொண்டதால், பகைப் புகை பரவாதிருக்கிறது, என்று கூறலாம்.

மாநாடு, நடைபெறவேண்டும் என்பதற்காக அவர்கள் தக்க முயற்சியை எடுத்துக்கொண்டனர், என்பது மட்டுமல்ல, கருத்து வேற்றுமைகளைக் குறைக்கவும், அரும்பாடு பட்டிருக்கின்றனர்.

மிகுந்த பொறுப்புடன் அவர்கள் நடந்துகொண்டது ஏற்பட இருந்த ஆபத்தை நெடுந்தொலைவிலேயே, தடுத்து நிறுத்த, உதவிற்று, என்றுகூட எனக்குத் தோன்றுகிறது.

குருஷேவ் இப்படிப் பேசியது, தவறு! என்று அயிசனோவரிடம் பேசித் தூபமிடவில்லை, கவனித்தாயா, தம்பி! இத்தனைக்கும், போர் என்று ஏற்பட்டு விட்டால், அவர்கள் இருவரும், அயிசனோவரின் அணியில் இருக்கக் கடமைப்பட்டவர்கள். எனினும் அவர்கள், பகை குறைத்திடப் பாடுபட்டனர்—பண்பு அதுவன்றோ!

பாரிசில் இருந்துவந்த சூழ்நிலையில், மாக்மிலனோ, தெகோலோ, பொறுப்பை மறந்து, நடந்துகொண்டிருந்தால், தம்பி! இன்னேரம் போர் மூண்டுவிட்டிருக்கக்கூடும்.

"விடாதே! விடாதே! பார், பார், அவன் கர்வத்தை!" என்று தூண்டிவிடுவதும் தூபம்போடுவதும், எளிதுமட்டுமல்ல, சுவைகூடத்தரும்.

பிரான்சு, பிரிட்டன் ஆகிய இரு நாடுகளுமே, அமெரிக்கா, இரஷியா ஆகியவைகளோடு ஒப்பிட்டுப்

பார்க்கும்போது, எந்த முனையில் இருந்து கவனித்தாலும் இரண்டாம் வரிசையில்தான் இருக்கமுடியும்.

எனினும், அந்நாட்டுத் தலைவர்கள் மிகப்பெரிய நாடுகள், செல்வம் கொழிக்கும் இடங்கள், வல்லமை வளர்ந்துள்ள நாடுகள் என்று கூறத்தக்க, இரஷியா, அமெரிக்கா ; எனும் இருபெரும நாட்டுத்தலைவர்களை விட, தமது போக்கினால், தரத்திலே உயர்ந்தோராயினர்.

இருபெரும் நாட்டுத் தலைவர்களும், இவர்களிடம் தத்தமது நிலைமையினைக் கூறவும், இவர்கள் அந்தப் பெருந்தலைவர்களுக்குப், பொறுமையின் அருமை பொறுப்புப்பற்றிய பெருமை, ஆகியவற்றை எடுத்துக்கூறவுமான நிலை அல்லவா கண்டோம்! பாரிஸ் மாநாடு — நடைபெறாத மாநாடு — இந்தப் பேருண்மையை எடுத்துக்காட்ட உதவிற்று.

இவர்களல்லாமல், ஒரு அணு ஆயுதக் கிடங்குக்காரர், பீரங்கி தயாரிக்கும தொழிலதிபர், விமானம் கட்டும் தொழில் முதல்வர், விஷபுகை தயாரித்து விற்போர், கலந்து பேசுவதிலே இடம் பெற்றிருப்பார்களானால், பகை கூடாது, போர் ஆகாது என்று பேசியிருப்பர்.

உங்களுக்கு ஏற்படலாமா, இந்த அவமதிப்பு!

எப்படி இந்த அக்ரமத்தைத் தாங்கிக்கொள்ள முடிகிறது, உங்களால்!—என்று தூண்டிவிட்டிருப்பர்—பிறகு? போர்தான்! இரத்தம்கொட்ட, மக்கள்! இலாபமதிரட்ட, அந்த முதலாளிகள்.

இரண்டு உலகப் பெரும்போர்களின்போதும் ஜெர்மன்நாட்டை முறையே நடத்திச்சென்ற, கெய்சர், ஹிட்லர், ஆகியோருக்கு, பக்கம்நின்று, யோசனை கூறியவர்கள் அந்த நாட்டிலே, போர்க்கருவிகள் தயாரித்துக் குவித்திருந்த, கொள்ளை இலாபக்காரர்கள், குருப்ஸ்போன்ற முதலாளிகள்தான்! போர் மூண்டிட அவர்களின்; 'தூபம்' வெகுவாகப் பயன்பட்டது! நாடு, சுடுகாடாயிற்று, அந்த முதலாளிகளின் பெட்டி நிரம்பிற்று!

அத்தகைய சூழ்நிலை இன்று ஏற்படாமலிருந்தது ஆபத்தைத் தடுக்க, மிகமிக, உதவிற்று.

இத்தகைய, சூழ்நிலையைத் தொடர்ந்து பெற்றுமாக்மிலன, தெ'கோல் போன்றார், இடைவிடாத முயற்சி எடுத்துக்கொண்டு, பகைநீங்கிடச் செய்தல் வேண்டும். ஏனெனில், இனியொருபோர் என்றால், வெற்றி பெற்றவர்கூட வெற்றியின் பலனைச் சுவைத்திட முடியாது; ஏனெனில், சுற்றிலும் பாழ்வெளிதான், மிஞ்சும்.

இந்தப் பேருண்மை பெருந்தலைவர்களுக்கும் மிக நன்றாகத் தெரிந்திருக்கிற காரணத்தால்தான் ஆத்திரம் அடங்கிவிடுகிறது; போர்வெறி ஒடுங்கிவிடுகிறது.

போர் ஏற்படாதிருக்கும் பொன்னான ஏற்பாட்டை நானா? நீயா? என்று ஒருவரை ஒருவர் மிரட்டும் அளவுக்கு ஓங்கிவளர்ந்துவிட்டுள்ள அமெரிக்கா, இரஷியா எனும் இரு நாடுகளைவிட, அளவிலே குறைந்திருப்பினும், தரத்தை இழந்துவிடாமலிருக்கும், பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகள், முன்னின்று சமைத்தளிக்க முடியும். ஆனால், அவை தமக்கு எது ஏற்ற கட்சி என்று கணக்குப்பார்க்காமலும் இலாபம் தேடாமலும் இருந்திடவேண்டும். பல நாடுகள் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளன; மகிழ்ச்சி.

தம்பி! தீவிலேயே விட்டுவிட்டோமே, பாவம்! வா! அவனைக் காண்போம்.

அவன் கலக்கமடைந்த பிறகு, தீவே போதும் என்று எண்ணுகிறான். ஆனால், மீண்டும் கூடி வாழ வேண்டும் என்ற எண்ணம் அவனை விடுவதாக இல்லை. மறுபடியும் பார்க்கிறான், இதழ்களை. உலகிலே, போர்ப்பயம் இருப்பினும், அதை நீக்கிடும் முயற்சியும் விடாமல் நடக்கிறது, அக்ரமங்கள் இருப்பினும் அதை எதிர்த்து நிற்கும் துணிவு மக்களுக்கு வளர்ந்து வருகிறது, அலங்கோலங்கள் இருப்பினும் அவைகளை நீக்கிடத் தக்க நல்லாட்சி அமைக்கவேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது, இல்லாமையை, கல்லாமையை விரட்ட முயற்சிகள்; நோய் போக்கும் நன் மருந்துகள் தயாரிக்கும் ஏற்பாடுகள் எல்லாம், நாளுக்கு நாள் வளருகிறது—இவைபற்றிய குறிப்புகள் காண்கிறான்; நம்பிக்கை கொள்கிறான்.

கலம் தெரிகிறது' களிப்புடன், வரவேற்கிறான்!!

"எம்மோடு, வரச் சம்மதமா?" என்று கேட்கிறான், படகில் வந்தோன்.

"ஆம்! அவரவர் தத்தமது பாதுகாப்பையும் சுகத்தையும் மட்டுமே கருதித், தீவிலே தங்கிவிட்டால் உலகைத் திருத்த எவர் உளர்? வருகிறேன், உம்மோடு நின்று பணிபுரிய," என்றான்.

கலம் புறப்பட்டுவிட்டது! வருகிறான், தீவை விட்டு, வாழப்பிறந்தவன்!

ஆம், தம்பி! வாழப்பிறந்தோம், அதற்கேற்ப இந்த வையகத்தை மாற்றி அமைப்போம் என்ற நோக்கம் வேண்டும். அவரவர், தத்தமக்கு கிடைத்திடும் வாய்ப்புக்கு ஏற்ப, அந்தப் பொது நோக்கம் வெற்றிபெறப் பணியாற்றவேண்டும்! தொல்லை இல்லாத வாழ்வு தேடித், தீவு நாடுவது, மனித இயல்பு அல்ல! தீவில் தங்கியவன் கதை, இந்தக் கருத்தைத் தான் விளக்குகிறது.

அண்ணன்,

அண்ணாதுரை

2-ம் பக்கத் தொடர்ச்சி

சாலை பிள்ளைபோல் தன் பிள்ளையும் நன்றாக இருக்கவேண்டும் என்று ஏங்கிய மலர்விழிமீது என்ன தவறு இருக்கமுடியும்? இயற்கைதானே!

மாணிக்கம் தன் தாயின் பேச்சைக் கேட்டுத் துடித்தேபோனான்! தன் தாய் இதுபோல் பேசி என்றுமே கேட்டதில்லை அவன்! தாயின் ஏக்கத்தை எண்ணி எண்ணித் தனிமையில் கண்ணீர் வடித்தான்!

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான். பட்டணம் செல்வது, யார் காலில் விழுந்தாவது வேலையில் சேர்வது; பின்னர் தாயை வந்து காண்பது! என்று முடிவுசெய்து பத்து ரூபாய் பணத்துடன் பயணம் தொடங்கினான் பட்டணக் கரைக்கு!

•

மதிவாணன், தன் இன்பமனைவி மலர்விழிக்கு விதவைப் பட்டத்தைச் சூட்டிவிட்டு, ஒருவயது நிரம்பிய மகன் மாணிக்கத்தைத் தன் குடும்ப நிதியாக அவளிடம் ஒப்படைத்துவிட்டுப் பயணம் சென்றுவிட்டார் சாவூரை நோக்கி!

கணவனை இழந்த மலர்விழி அழுதாள்! ஆற்றுவாரில்லை!! துடித்தாள்! தேற்றுவாரில்லை!!

மதிவாணன் தன் மனைவி மலர்விழிக்கு வைத்துவிட்டுபோன சொத்து எல்லாம் ஒருவயது மகன் மாணிக்கத்தைத்தவிர, வேறு எதுவும் கிடையாது! கணவனைப் பறிகொடுத்த மலர்விழி நடுத்தெருவிலே நின்றாள்!

பத்துமாதம் சுமந்து பெற்ற மகன் மாணிக்கத்தை ஆளாக்க வேண்டும்; படிக்கவைக்கவேண்டும், விதவைக்கோலத்தில் உள்ள தன்னைக் காத்து வாழவேண்டும்! என்று எண்ணியபொழுது அப்பேதையின் விழிகள் இரண்டும் அருவிகள் ஆயின! அந்த அருவிகள் சிந்திய கண்ணீர் அவள் பெற்ற மாணிக்கத்தின் உடலை நனைத்தது! தன் தாய் சிந்தும் கண்ணீரின் கருத்தைப் புரிந்துகொள்ள முடியாத அந்த பிஞ்சு உள்ளம் அவளைப் பார்த்துச் சிரித்தது!

குழந்தையின் சிரிப்பில் அவள் தன் கணவனைக் கண்டாள். கணவன் இறக்கும்பொழுது அவளுக்குக் கூறிய வார்த்தைகள் அவள் உள்ளத்தில் எதிரொலித்தன! "மலர்விழி! நான் போகிறேனே என்று கலங்காதே. நம் செல்வம் மாணிக்கம் இருக்கிறான். அவன் சிரித்தால் உன் கவலை தீரும். அவனை வளர்ப்பதிலும், படிக்கவைப்பதிலும் உன் நினைவைச் செலுத்து. என்னை நினைத்து ஏங்காதே! அவனைத் தனியே தவிக்கவிட்டுவிட்டு நீயும் என்னோடு வந்துவிடாதே! என் பிரிவால் நீ எந்த முடிவுக்கும் வந்துவிடுவாய் — அதனால்தான் கூறுகிறேன். நம் மாணிக்கத்தைப் படிக்கவைத்துப் பெரியவனாக்கிவிட்டால் உன்னைக் காப்பாற்றிவிடுவான்" — தன் கணவனின் இந்த வார்த்தைகள் அவளுக்கு நம்பிக்கையைத் தந்தன.

தான் பெற்ற மாணிக்கத்தை மீண்டும் ஒரு முறை பார்த்தாள். எங்கிருந்தோ ஒரு புதிய 'தெம்பு' அவள் உடலில் பாய்ந்தது. வாழ வேண்டும் என்ற உறுதி அவள் உள்ளத்தில் துளிர்த்தது! பரந்த உலகத்தைப் பார்த்தாள்! நீண்ட வானத்தை நோக்கினாள்! நம்பிக்கை பிறந்தது அவள்உள்ளத்தில்! தன் மகனைத் தோளில் போட்டுக்கொண்டு நடந்தாள்!

இப்பொழுது மலர்விழி வெறும் மலர்விழி அல்ல! பூவை மலர்விழி, தொழிலாளி மலர்விழியானாள்! அவள் செய்யாதவேலை இல்லை. சுற்றாத இடம் கிடையாது. வேலை செய்து அவள் தளிர்க்கரம் உரம் ஏறின! சிரிக்கும் கண்கள் ஒளி இழந்தன! மலர்முகம் சுருங்கியது! தங்கநிற மேனியாள் உருக்குலைந்து ஓடானாள்!

எந்த ஒரு இலட்சியத்திற்காகத் தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கினாளோ அந்த இலட்சியம் ஈடேறிவிட்டது! அவள்பெற்ற அருமை மகன் மாணிக்கம் இப்பொழுது சாதாரண மாணிக்கம் அல்ல! இருபதுவயது நிரம்பிய கட்டிளம்காளை! பட்டதாரி! மாணிக்கம் பி. ஏ!! காலத்தின் கோலத்திலும், அவளது சலியா உழைப்பிலும் கிடைத்ததுதான் அந்த இரண்டு எழுத்துக்கள் பி. ஏ!

மகன் பி. ஏ. பட்டதாரி என்ற செய்தி கேட்டபொழுது மலர்விழி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! நீண்ட பெருமூச்சுவிட்டாள்! தன் வாழ்க்கைப் பயணத்தில் உருப்படியான காரியம் நிறைவேறிவிட்டதை எண்ணியபொழுது அத்தாய் உள்ளம் குளிர்ந்தது! இனித் தன் வாழ்வில் விடிவுகாலம் வந்துவிடும், தென்றல் தவழும் என்று மகிழ்ந்திருந்தாள்!

இப்படி எல்லாம் கஷ்டப்பட்டு மகனைப் படிக்கவைத்து, அவன் இன்ப வாழ்வைக் காணவேண்டும் என்று துடித்த அத்தாய் உள்ளம், மகனுக்கு இன்னும் வேலையே கிடைக்காததை எண்ணியபோது குமுறியது! மரம் நட்டு, பாடுபட்டு வளர்த்து, அது பலன் தரவில்லை என்றால்எப்படிக்கொதிக்கும் மனம்! அதுபோலத்தான் மலர்விழியின் உள்ளமும் கொதித்தது, தன் மகனுக்கு வேலை கிடைக்காததை நினைத்தபோது! அதனால்தான் தன் மகனிடம்சற்றுக் கடுமையாகப் பேசிவிட்டாள் அன்று!

இன்றுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றியோ அல்லது ஆட்சியின் அலங்கோலத்தைப்பற்றியோ அத்தாய் உள்ளத்திற்குத் தெரியாது! தெரிந்திருந்தால் மகன் கூற்றை நம்பி இருப்பாள்! ஆத்திரப்பட்டுக் கடுமையாக அவனிடம் பேசியிருக்கமாட்டாள்! ஆட்சியின் அவலநிலையை எண்ணிப் பெருமூச்சு விட்டிருப்பாள்!

*

வங்காளவிரிகுடாக்கடல்; அதன் கரையிலே அழகான மெரினா கடற்கரை; மாலை நேரம்; தென்றல் மகிழ்ந்திடும் வேளை; பலதரப்பட்ட மனித கூட்டங்கள்; இளங்காளையர்கள்;- இன்பவல்லிகள்; வாழ்க்கைப் பயணத்தை முடிக்கும் பழுத்த பழங்கள்; வாழ்க்கைப் பயணத்தை தொடங்கும் இளம் பாலர்கள்; ஒவ்வொருவர் முகத்திலும் மகிழ்ச்சி! காளையர்க்கும், கன்னியர்க்கும் விழியாலே போர்; புதுமணத் தம்பதிகள் தனிமையில் ஆர்த்தமற்றுப் பேசும் காட்சி; இப்படிப்பட்ட காட்சிகள் கடற்கரையில்!

ஆனால்...

ஒரு உருவம் மட்டும் சோகத்தின் மொத்த உருவமாய் வீற்றிருந்தது அந்தக் கடற்கரைக் கூட்டத்தில்! கன்னத்திலே கைவைத்துக் கவலை தோய்ந்த முகம்; சுருண்டு கலைந்த மயிர்; பழுப்பு ஏறிய 'பாண்ட்', மார்பு தெரியும்படி பித்தான் இல்லாத 'ஒப்பன் ஷர்ட்'

கடலைப்போல் கொந்தளிக்கும் உள்ளம்; ஓட்டப்பந்தயத்தில் சென்றவன்போல் படக் படக் என்று துடிக்கும் நாடி; இனித் தனக்கு வாழ்வே கிடைக்காதா என்ற ஏக்கம்; இப்படிப்பட்ட நிலையில் அந்த உருவம் கடலைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தது!

அந்த உருவம் வேறு யாருமல்ல! மலர்விழி பெற்ற பெருமகன் மாணிக்கம்தான்! கடந்த ஒருவார மாகப் பட்டணத்தில் வேலைக்காக அலைந்து திரிந்து அலுத்துவிட்டான். எங்கும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. தன நம்பிக்கை இழந்தான்! இனித் தனக்கு வாழ்வே இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டான்!

இப்பொழுது அவன் சிந்தனைகள் பல கேள்விகளை எழுப்பின. படித்தவனுக்கு இந்த நாட்டில் வேலை கிடைக்கல்லை, இதற்கு யார் காரணம்? விதைத்து அறுத்தவனுக்கு கூழும், மிரட்டியவனுக்கு பருப்புச் சோறும் ஏன்? கட்டியவனுக்கு குடிசையும், சோம்பேறிக்கு மாளிகையும் ஏன்? பட்டதாரிக்குக் குமஸ்தா பட்டம்! தற்குறிக்கு முதலாளிப்பட்டம்! இது என்ன நியாயம்? வியர்வை சொட்டியவன் விவசாயி! பட்டா உடையவன் பண்ணையார், ஏன் இந்த நிலை? — அவன் பொருளாதார மூளை அவனை எங்கெங்கோ அழைத்துச் சென்றது!

சிந்தனை அவன் உள்ளத்தில் சூடேற்றியது! நாடித் துடிப்புப் படக் படக்கென்று அடித்தது! உடல் சிலிர்த்தது! எலும்புகள் நடுங்கின! நரம்புகள் துடித்தன! சிந்தனை சிதறிற்று! அவன் சித்தம் கலங்கியது!

ஆ! இப்பொழுது மாணிக்கம் மனிதன் அல்ல! பயித்தியம்!! பகுத்தறிவைப் பறிகொடுத்தவன்! அவனுக்கு இப்பொழுது தாயைப் பற்றிய கவலை கிடையாது! ஊரைப்பற்றி, உலகைப்பற்றிய சிந்தனை இப்பொழுது அவனுக்கு இல்லை!

கடற்கரையிலே உள்ள மக்கட் கூட்டத்தைப்பற்றி இலட்சியம் செய்யவில்லை மாணிக்கம்! சட்டையை கழற்றித் தோளில் போட்டுக்கொண்டான்! தலைமயிரைக் கலைத்துக்கொண்டான்! முகத்திலே அர்த்தமற்ற விகாரச் சிரிப்பு! எழுந்து இப்படியும், அப்படியும் நடைபோட்டான்!

கூடியிருந்தவர்களுக்கு அவன் நிலை புரிந்துவிட்டது. பாலர் பட்டாளம் 'பயித்தியண்டோ' என்று பட்டம் சூட்டி அவனைச் சூழ்ந்து கொண்டனர். பயித்தியம் பேசத் தொடங்கியது:

"வேலை காலி இல்லை. போ! போ!! நோ வேகன்சி! யூ, கெட் அவுட்! மந்திரி தெரியுமா உனக்கு! மந்திரி!! அப்ப உனக்கு வேலை! இலஞ்சம் கொடுப்பியா! இலஞ்சம்! அப்ப உனக்கு வேலை! உங்க மகனுக்கு வேலை கிடைக்கலேன்னு எங்க அம்மாகிட்டச் சொல்லுங்க! போங்கவேகமா! அடபோங்கன்னு!"

பயித்தியம் இப்பொழுது பாடவே தொடங்கிவிட்டது!

"படித்தவனுக்கு வேலை இல்லை
பாட்டாளிக்கு வேலை இல்லை—
பாருக்கெல்லாம்
முழங்கிடுக மக்களே!
இந்த அவல நிலை இங்குமட்டும்
என்று நீங்க—ஊருக்கெல்லாம்
சொல்லிடுங்க மக்களே!"

சிறுவர்கள் பயித்தியத்தின் பாட்டைக்கேட்டுக்கெக்கலி கொட்டி ஆர்ப்பரித்தனர். "ஐயோ பாவம்! இந்த இளைஞனுக்கா பயித்தியம் பிடிக்க வேண்டும்! பார்த்தால் படித்தவன் போல் அல்லவா தெரிகிறான். வேலையில்லாக் கொடுமைதான் இவனைப் பயித்தியமாக்கிவிட்டது" —இதுபோல் அநுதாப வார்த்தைகளை அள்ளி வீசிக்கொண்டிருந்தனர் கூடியிருந்த மக்கள்!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால், வேண்டுவதெல்லாம் நமது அமைச்சர்களின துணிவும், கடமையாற்றும் பண்பும்தான். நெஞ்சில் வீரம்கொண்டு பணியாற்றுவார்களேயானால் இந்தப் பலனை நாம் எளிதில் பெற முடியும். ஏனெனில் இத்திட்டங்கள் நிறைவேற பக்கத்து மாநிலங்களின் உதவி தேவையாக இருக்கிறது.

அண்டை மாநிலமான 'ஆந்திரம்' காங்கிரசாரின் ஆட்சியின் கீழ்தான் இருக்கிறது, "கேரளத்தில்" காங்கிரசும் சோசலிஸ்டுகளும் சேர்ந்துதான் அமைச்சரவை அமைத்திருக்கிறார்கள். மத்தியிலும் காங்கிரசே கொடிகட்டி ஆண்டு வருகிறது. எனவே காங்கிரசு ஆட்சியாளர்களே இதை எளிதில் செயலாக்க முடியும்.

"எங்கே பெரிய ஆறு இருக்கிறது" என்று பேசித் தேடியலையும் நமது அமைச்சர்களுக்கு இத்திட்டங்களைக் காணிக்கையாக்குகிறோம். இந்த நான்கு திட்டங்களையும் நிறைவேற்றினால் போதும்! ஏளனம் வேண்டாம். செயலில் இறங்குங்கள், "கனவுபோல் இருப்பதை நனவாக்குங்கள்!"

★

வெப்பம் தணியுமா?

அன்பு. த. நாராயணசாமி

கொளுத்தும் கோடைக்காலம் முழுவதுமே ஒரு தொழிலும் செய்யாமல் நிம்மதியாக வீட்டிலேயே இருந்துவிட்டால் எவ்வளவு இன்பமாக இருக்கும்? கொடுத்துவைத்தவர்கள் பள்ளி மாணவர்கள்தாமே! அரைநாள் பொழுதேனும் கடையை மூடலாமென்றால், மறுநாள் வாழ்விற்கு என்செய்வது? ஒருநாள் முழுவதும் கடையைத் திறந்து வைத்திருந்தால் பத்துப் பதினைந்து ரூபாவிற்குத்தான் வியாபாரம் நடக்கும். அதில் வரும் வருமானம், நம் மந்திரிகளுக்கு வரும் வருமானத்தைப் போன்றதா, என்ன?

கொளுத்தும் வெயிலானாலும் சரி, கொட்டும் மழையானாலும் சரி, 'உலகம்' தன் கடமையைச் செய்யத் தவறுவதில்லையே! கால்கள் கொப்பளித்துவிடும் கோடைக் காலத்திலும், உடல் நடுங்கும் 'குளிர்ச்சுரம்' வரும் மழைக்காலத்திலும் கைவண்டி இழுத்துப் பிழைப்பவன், கைவண்டி இழுத்துத்தான் பிழைக்கவேண்டியுள்ளது! அவர்கள் இந்தக் கோடை காலத்தில் கைவண்டி இழுத்துச் செல்லும் காட்சியைக் கண்டால் எனக்குக் கண்களிலே கண்ணீர் கரைபுரண்டுவிடும். அதை நினைத்தாலோ, நெஞ்சம் துயரத்தால் விம்மும்! ஏனிந்தப் பிழைப்பு அவர்களுக்கு? வயிற்றுப்பசிக்குத்தான்! அதையும் தொழிலாகக்கொள்ளாமல் வயிற்றுப்பசிக்கு வழிதேடும் கூட்டத்தின் எண்ணிக்கைமட்டும் குறைவா?

மூட்டை சுமந்துசெல்லும் சுமைதாங்கிகள்; ஆட்களை உட்கார வைத்து வண்டி இழுத்துச் செல்லும் ரிக்ஷாக்காரர்கள்; விளம்பர வண்டிகளைத் தள்ளிக்கொண்டு செல்லும் சிறு பிழைப்பாளர்கள்; வேலைதேடி அலையும் இளம் வாலிபர்கள், சிறுகச் சிறுகத் தண்ணீர் சொட்டும் கூடைகளைத் தூக்கிச் செல்லும் கூடைக்காரர்கள்...அதே சமயத்தில், குளிர்ச்சி செய்யப்பட்ட வண்டிகளிலே ஆடாமல், குலுங்காமல் பயணம்செய்யும் பணக்காரர்கள்; தலைக்குத் தொப்பியும், கண்களுக்குக் குளிர்ச்சியான கண்ணாடியும், கால்களுக்கு நல்ல விதப் பாதணிகளும் நல்ல உயர்தர உடைகளும், அணிந்து செல்லுவோரின கூட்டம்......ஆக, அந்த 'மௌண்ட்ரோடு' பகல் பன்னிரண்டு, ஒருமணிக்குக் கூடப் போக்குவரத்துக் குறையாமல் இருக்கும். 'அப்பப்பா! ஒரேயடியா தலை வெடிச்சிடும் போலிருக்கே' என்று கதிரவனின் வெம்மையைப் பொறுக்கமாட்டாமல் சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ள என் கடைப்பக்கம் வந்து நிற்போரின் தொகையும் எப்பொழுதும்போல் இருந்தது. வந்து நிற்பவர்களில் ஓரிருவர் எனக்கு வியாபாரத்தைத் தருவர். சிலர் எனக்குத் தொல்லையை விளைவிப்பர்!

அந்த 'மௌண்ட்ரோடில்' கடையை வைத்துக்கொண்டு, இந்த 'நரகவேதனை'யைப் பார்த்துப் பார்த்து வியாபாரம் செய்வதைவிட எங்கேயாவது ஒருமூலையில் வாளா இருந்துவிடலாம் என்ற எண்ணம் என் உள்ளத்தில் எழும்போதெல்லாம் நான், என் வயிற்றையும், என் குடும்பத்தையும் மறக்கமுடியவில்லையே! ஆகவேதான், வெளியில் பார்த்தும், பாராதவனையும்போல் என் சிறு கடைக்குள்ளேயே முடங்கிக் கிடப்பேன். அப்போது ஒருசமயம், ஒருவர் எழுப்பிய அவலமான ஓசையைக்கேட்டுப் பதறியவண்ணம் அவரிருக்குமிடம் ஓடினேன்! பாவம், அவர் கிழவர். காலில் செருப்பில்லாமலேயே கதிரவனின் 'கருணை'யையும் பொறுத்துக்கொண்டு அவ்வளவு தொலைவு நடந்துவந்திருக்கிறார். அவர் அங்கிருந்த அணைக்கப்படாத சிகரெட்டுத் துண்டு ஒன்றின்மீது காலை வைத்துவிட்டார்! முதலிலேயே கால்கள் கொப்பளித்துவிடும் அளவிற்குச் சிவந்திருந்தன. அந்நிலையில், நெருப்புத்துண்டின் மீது காலை வைத்துவிட்டால்.....? அவரை மெதுவாக அழைத்துச் சென்று, அவர் கால்களின்மீது தண்ணீரை ஊற்றினேன். கால்கள் குளிர்ச்சி பெறுமுன்னே, அவருடைய முகமும் அகமும் குளிர்ச்சியைப் பெற்றன!

பணம்படைத்த காரணத்தால் மனிதப்பண்பையேமறந்து, மிகுந்த செருக்கோடு 'சிகரெட்டைப் புகைத்துவிட்டு அதை அணைக்காமலேயே பாதையின்மீது வீசியெறிந்துவிட்டுச் செல்லும் வீணர்களை என்மனம் திட்டிச்சபித்தது. இதைப்போன்ற நிகழ்ச்சிகள் அநேகமாக ஒவ்வொருநாளும் நடைபெறுவதுதான்! ஆனால், மறுநாள் நடந்த அந்த நிகழ்ச்சியை நான் எப்படிக் கூறுவேன்?

சென்னையின் ஒரு கோடியிலிருந்து, இன்னொரு கோடிக்கு

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

உணவு எடுத்துச்செல்லும் ஏழைப் பெண்—கூடைக்காரி—அவள்!

கொளுத்தும் வெயிலில் பலருக்கு அவரவர்கள் இல்லங்களிலிருந்து உணவு எடுத்துச் செல்லும் தொழில், அவளுடையது! பாவம், அந்தக் கிழவிக்குத் தோலால்செய்தசெருப்போ, இரப்பரால் செய்த செருப்போ கிடையாது. கிழிந்த கந்தல் கோணியைத் தன் இருகால்களிலும் சுற்றிக்கொண்டு, தலையிலே சுமக்கமுடியாத அளவு சுமந்துசெல்லும் அக்காட்சி, காணுவோரின் உள்ளத்தை உருக்கிவிடும்! அவள் என கடைப்பக்கம் வந்து நடைபாதையினின்றும் இறங்கி, எதிர்ப்பாதைக்குச் செல்ல எத்தனித்தாள். போக்குவரத்துப் பாதையின் பாதிதூரத்தைக் கடந்துவிட்டாள். இன்னும் பாதி தூரந்தான். அதோ, ஒரு அடியும் எடுத்துவைத்துவிட்டாள்! 'ஐயோ' என்ற ஒலியையே தன் இறுதி வாழ்த்தாக இவ்வுலகிற்கு அளித்துச் சென்றுவிட்டாள்! ஆமாம், அழகான காரில் குறையாத வேகத்தில் வந்த ஒரு பணக்காரன்தான் அவள் மீது காரை ஏற்றிவிட்டான். கறுப்புக் கண்ணாடியைப போட்டுக்கொண்டு, இறுமாபபோடு காரை வேகமாக ஓட்டிவந்த அந்தப் பணக்காரன் தன் தவறை உணராது, 'சீ, சனியனே! பட்டம் பகலிலே உனக்குக் கண் தெரியல்லே' என்று தன் 'கௌரவமான' மொழியிலே திட்டித் தீர்த்தான்!

அதுவே, ஒரு கைவண்டிக்காரனாவது அல்லது ஈருருளை வண்டிக்காரனாவது ஏற்றிவிட்டிருந்தால், கூடியிருந்த கூட்டம் அவன் கூனை நிமிர்த்தியிருக்கும்! ஆனால், இப்போது ஏற்றியவனோ தனவான் ஆயிற்றே! கூடியிருந்தவரில் எவரும் எதிர்த்துக் குரலெழுப்பவில்லை!

கீழே இறங்கிப் பார்த்தவன், மீண்டும் தன்காரில் ஏறி, அமரப் போனான். அவன் கழுத்துப் பின்புறத்திலே ஒருகைப்பதிந்தது; அவனுடைச் சட்டையை இழுத்து, 'சார், நில்லுங்கள்' என்றது. கூடியிருந்த கூட்டம் அதிசயித்துவிட்டது!

"ஏய் கழுதை, கையை எடுடா!" என்று கோபக்கனல்வீசக் கொடுத்திட்டான் ஓர் அறையை என் கன்னத்தில்! ஆமாம், அவரைத் தடுத்து நிறுத்தியது நான்தான்! அவரை அடிக்க ஓங்கிய என்கைகளிலே விலங்கு! அதற்குள்ளாக அங்குவந்து சேர்ந்த காவல் உத்தியோகஸ்தர் என்னை மிரட்டி என் பேச்சையும் கேட்காமல், காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றுவிட்டனர். திறந்து கிடந்த என் கடையை அவர்களே மூடிவிட்டனர்!

உயிரைத் துறக்கச்செய்தவர் பணக்காரர்; உயிர் துறந்தவளும், அதற்கு நியாயம் கேட்கப்போனவனும் ஏழைகள்! இந்நிலையில், பணமபடைத்த முதலைகளுக்குப் புகலிடம் தரும் இந்த ஆட்சியின் தீர்ப்பிற்காக நான ஏங்கியிருக்கவில்லை. அள்ளியெடுத்து வீசியிருப்பான பணத்தை; துள்ளி ஓடிவிட்டது அவனைவிட்டுக் குற்றமும்! உயிர்த்துறந்தவளின் குடும்பத்திற்கேனும் பணம் கிடைக்குமென்று எதிர்பார்த்தேன்; கிடைத்ததாம்.

என்ன இருந்தும், உயிரைப் போக்கிய குற்றத்தைத் தன பணத்தால் போக்கிக்கொண்டானே! அவனை அடிக்கச் சென்றதாக எனமேல் குற்றச்சாட்டு! தீர்ப்பு—ஆறுமாதச் சிறைச்சாலை வாழ்வு! அந்தக் கோடையின் கொடுமையை எந்த ஏழையும் தாங்கிக்கொள்ளலாம்; ஆனால், இந்தப் பணக்காரர்களின கொடுமையையும், நீதியற்ற ஆட்சியின கொடுமையையும் எந்த ஏழையாலும் தாங்கிக்கொள்ள முடியாது! எப்படியும் சமாளித்து அனுப்பிவிடலாம் அந்தக் கோடைக்காலத்தை; ஆனால், எப்படியும் சமாளித்து அனுப்பமுடியாதே! இந்தப் 'பணக்கொடுமைக் காலத்தை?' ஆண்டிற்கு ஒருதடவைதான் வந்துபோகும் கோடைக்காலம். ஆனால், ஆண்டாண்டு காலமாக அல்லவா நீடித்து நிற்கிறது இந்தப் 'பணக்காரர்களின் கொடுமை!' எனக்காகிலும் 'உருண்டைச் சோறு' கிடைத்துவிடும், என் குடும்பத்தினருக்கு......?

வெளியிலே கொளுத்திக்கொண்டிருக்கும் வெயிலைவிட இப்போது என்னுள்ளத்திலே, பணக்காரர்களால்வஞ்சிக்கப்பட்ட என்போன்ற ஏழைகளின் உள்ளங்களிலேவெந்துகொண்டிருக்கும் வெப்பத்தின் உயர்ச்சி மிகமிக அதிகம்!

பணக்காரர்களின் கொடுமைகளைத் தாங்கமாட்டாது வெந்துகொண்டிருக்கும் ஏழை உள்ளங்களின வெப்பம் தணியும் நாள், எந்நாள்?

பணக்காரர்களின் கொடுமையினால் ஏழைகளின் உள்ளங்களிலே இருக்கும் வெப்பம் தணியுமா?

அவர்களின் 'கொடுமை வெப்பம்' தணியும் அந்நாள்வரை 'ஏழை மனம்' குமுறிக்கொண்டுதானிருக்கும்!

★



காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில் ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.